1969 செப்டம்பர் 11]

திரு. கே. விநாயகம் : இந்த அதிகாரிகளின் பெயர் என்ன? நான்-அபீஷியல்ஸ் யாராவது அந்தக் குழுவில் போடப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதிகாரிகள் அடங்கிய குழு என்றால், நான்-அபீஷியல்ஸ் அதில் இல்லை என்பது தெளிவாகத் தெரிய வரும். அரசுச் செயலாளர், நிதித்துறை இந்தக் குழுவின் தலைவர். அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை—உறுப்பினர். அரசுச் செயலாளர், சுகாதாரம்—குடும்ப நலத்துறை—உறுப்பினர். தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (பொது)—உறுப்பினர். அரசுத் துணைச் செயலாளர் (உள்ளாட்சி பணியாளர்) கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறை—உறுப்பினர்— செயலாளர். கிராம வளர்ச்சி இணை இயக்குநர் (கல்வி) கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகம்—உறுப்பினர்.

திரு. கே. விநாயகம் : இந்தக் குழுவில் மேயர் அவர்களையும், ஸ்டாண்டிங் பினான்ஸ் கமிட்டி சேர்மன் அவர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு என்ன தடை இருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மேயர் அவர்களும், மற்றவர்களும் வந்து அரசினருடைய உதவியை நாடினார்கள். கார்ப்பரேஷன் நிதி நிலைமையில் ஏற்பட்ட சிக்கல்களையும், நடைமுறைச் சங்கடங்களையும் தீர்த்து வைக்க தங்களுக்கு உதவி தேவை என்று கேட்டபொழுது, அந்த அடிப்படையில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதைப்பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழு மேயர் அவர்களையும், சென்டிரல் கமிட்டி சேர்மன், கமிஷனர், ஆகியோர் அனைவரையும் கலந்து கொண்டு, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டுக்கொள்ளும்.

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம்

* 216 வினா.—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1—1—1968 முதல் 31—12—1968 முடிய எத்தனை தீர்மானங்கள் போடப் பட்டன?

(இ) அவற்றில், எத்தனை செய்து முடிக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 403.

(இ) 390.

மேலூர் வடக்கு ஒன்றியத்திற்குப் பணிமனைக் கட்டடம்

* 217 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வடக்கு ஒன்றியத்திற்கான பணிமனைக் கட்டடத்தை (Office Building) இதுவரை கட்டாததற்குரிய காரணம் என்ன?